[1998 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்பு குறித்து தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. தெய்வநாயகம் அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி அவர்களும், பா.ம.க.-1 சார்பில் திரு. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. சார்பில் திரு. திருநாவுக்கரசு அவர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். மதுரையிலே கொலையுண்ட பேராசிரியர் கே.ஆர். பரமசிவம் அவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போலவும், நான் கேள்விப்பட்டதற்கிணங்கவும் மிக மிக நற்பண்புகள் வாய்ந்தவர்; யாருடைய வம்புக்கும் போகாத அரும் குணவானாகத் திகழ்ந்தவர். அவர் தனிப்பட்ட பகை காரணமாகவோ அல்லது மதமாச்சரிய வெறியின் காரணமாகவோ, இன்னும் தெளிவான காரணம் கண்டுபிடிக்கப்பட முடியாத சூழ்நிலையில், கொலையுண்டு இருக்கிறார் என்பது வருந்தத்தக்க செய்தி மாத்திரமல்ல மிக மிகக் கண்டிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியுமாகும். அந்தக் கொலை நடைபெற்று இரண்டு நாட்களாகிவிட்டன, இன்னும் குற்றவாளிகள் அல்லது கொலையாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற மனக்குறையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 11-00

ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டு, காவல்துறையினர் மிகக் கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டு, இந்தக் காரியத்திலே துணிந்து இறங்கியவர்கள் யார் என்பதை அறிந்து, கைது செய்வதற்காக முயற்சிக்கின்ற நேரத்தில், அப்படிக் கைது செய்து விசாரிப்பதைக் கூடத் தவறு என்று ஒரு கூட்டத்தார் வம்பு செய்ததைக் குறிப்பிட்டு, அது மிக மிகக் கண்டிக்கத்தக்கது, அதற்கெல்லாம் இடம் தரக்கூடாது என்று இங்கே நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்கள் எடுத்துரைத்தார்கள். பொதுவாக நல்ல காரியங்களுக்காகவும் மக்கள் திரண்டு எழுகின்றார்கள், சில நேரங்களிலே தவறான செயல்களுக்காகவும் திரண்டு எழுகின்றார்கள்.

அண்மையிலேகூட கல் குவாரி ஒன்றில் கற்களைத் திருட்டுத்தனமாக ஏற்றிச் சென்ற லாரியை மடக்கிப் பிடித்தார் என்பதற்காக ஒரு

பெண் அதிகாரி கேரோ செய்யப்பட்டு, சாலை மறியல் செய்யப்பட்டு, பிறகு காவல் துறை அதிகாரிகள் சென்று அந்தப் பெண் அதிகாரியை மீட்டார்கள் என்ற சம்பவம் சென்னைக்கு அருகிலேயே நடைபெற்றதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். எனவே திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதுபோல எடுத்ததற்கெல்லாம் சாலை மறியல், பஸ்களைக் கொளுத்துதல், பஸ்களைச் சேதப்படுத்துதல் போன்ற இந்தக் காரியங்களைத் தொடர்ந்து இனியும் யாரும் செய்வார்களேயானால், அவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏற்கெனவே, பேருந்துகளைக் கொளுத்துகின்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, அவர்கள் எல்லாம் தண்டிக்கப்பட்டிருக்கின்றார்கள். அது மேலும் தொடரக்கூடிய சூழ்நிலை உருவாகும் என நான் எச்சரிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

இந்தக் கொலையைப் பொறுத்தவரையில், இது மத விரோதம் காரணமாக நடைபெற்றிருக்கக்கூடிய ஒன்றாக இருக்கலாம் என்று காவல்துறையினர் யூகிக்கின்றார்கள். தனிப்பட்ட முறையிலே நடைபெற்ற ஒன்றாக இருக்கக்கூடும் என்றும் சில கருத்துகள் நிலவுகின்றன. எந்தக் காரணமாக இருந்தாலும், கொலை அதற்குப் பரிகாரமாகாது. அது கண்டிக்கத்தக்க ஒரு முறையாகும். அதை நாம் யாரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை.

நம்முடைய திரு. தாமரைக்கனி குறிப்பிட்டார், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இந்து முன்னணியினர் இப்படிக் கொலை செய்யப்படுவது சகஜமாகிவிட்டது என்று சொன்னார். நம்முடைய திரு. சந்தானம் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள்; அதே மதுரை மாநகரத்தில் கடந்த ஆட்சிக்காலத்தில்தான் இவரைப்போன்ற ஒரு நல்லவர் ராஜகோபாலன் என்கின்ற இந்து முன்னணியைச் சேர்ந்தவர் கொலைசெய்யப்பட்டு, அந்தக் கொலையிலே ஈடுபட்டவர்கள் யார் என்பது கண்டுபிடிக்க முடியாமல் இருந்து, மிக மிகத் தாமதமாக அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த வழக்கு இப்போது இந்த ஆட்சியிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சியிலே இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்ல, இந்து முன்னணியினரின் கட்டடங்கள் கூட வெடி வைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகரத்திலே உள்ள ஆர். எஸ். எஸ். அலுவலகம் குண்டு வைத்து நொறுக்கப்பட்டதும், 11 பேர் இந்து முன்னணி அல்லது ஆர். எஸ். எஸ்.-ஐச் சேர்ந்தவர்கள் அந்த இடத்திலேயே மாண்டு மடிந்ததும், கடந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கின்றன. எனவே, அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல், பொதுவாக இத்தகைய வன்முறைகள் எந்த ஆட்சியில் நடைபெற்றாலும், அதைக் கண்டிக்கக்கூடிய சுபாவத்தை, அந்தப் பண்பாட்டை நாம் கற்றாக வேண்டும். அனைவரும் சேர்ந்து இத்தகைய கொடுமைகளைக் கண்டித்தால், இதுபோன்ற நிலைமைகள் தொடர்ந்து நடைபெறாமல் தடுத்திட இயலும். ஓர் அமைதியை உருவாக்கிட முடியும்.

முற்பகல் 11-05

இந்தக் கொலையைப் பொறுத்தவரையிலே போலீசார் மிகத் தீவிரமாகக் கொலையாளிகளைத் தேடுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்றார்கள். கொல்லப்பட்டவருடைய சகோதரர் பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் மதுரை, மதிச்சியம் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று, குற்ற எண் 246/98-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 302-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. இன்றல்ல; நாளை அல்ல; அல்லது நாளை மறுநாள் அல்ல, எப்படியும் குற்றவாளிகளைப் பிடித்தே தீருவோம் என்கின்ற உறுதியை மதுரை மாநகரத்துக் காவல்துறையினர் வழங்கியிருக்கின்றார்கள்.

கொலையுண்டு மரணமடைந்த பரமசிவம் அவர்களுடைய குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகை தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்கேற்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்தக் கொலையிலே நிச்சயமாகக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்ற உறுதியை வழங்கி, இந்த அளவில் இந்தத் தீர்மானத்திலே உரையாற்றியவர்களுக்கு என்னுடைய கருத்து விளக்கத்தைத் தந்து அமைகின்றேன். வணக்கம்.